பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

51 ] சென்னை—ஞாயிறு, மார்ச்சு 30, 1947. [ விலை. அணா 2

## என் நோக்கம்

மகாத்மா காந்தியடிகள் 1947 மார்ச்சு 17-ந் தேதி மசார்ஹி என்னும் இடத்தில் நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்திற்கு 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் வந்திருந்தார்கள்.

ராம்துன் பஜனை பாடப்பட்ட பொழுது ஆண்களிலும் பெண்களிலும் பெரும் பகுதியார் அதில் கலந்து கொண்டார்கள். காந்தியடிகள் பிரார்த்தனைக்குப் பின் இறுதியில் கூறியதாவது:—

“ இன்று நீங்கள் இந்தவிதமாக ராம்துன் பஜனையில் கலந்து கொண்டதற்காக உங்கள் எல்லோரையும் பாராட்டுகின்றேன். நான் பீஹாரில் கிராமம் கிராமமாக செல்ல ஆரம்பித்திருப்பது வினோதார்த்தமாக அல்ல. மிக முக்கியமான காரணங்களுக்காகவே. முஸ்லிம்கள் எங்கே துன்பம் அடைந்திருக்கிறார்களோ அங்கே செல்வேன்.

ஹிந்துக்கள் தகுந்த விதமாக நடந்து தங்கள் பச்சாத்தாபத்தைக் காட்டிக் கொள்ள வேண்டுகின்றேன்.

சென்ற வருஷம் நவம்பர் மாதத்தில் இந்துக்களுக்கு வெறி உண்டாகி விட்டது. பெண்களையும் பிள்ளைகளையும் ஈவு இரக்கமின்றி கொன்று விட்டார்கள். நவகாளியிலும் வருந்தத் தக்க அக்கிரமங்கள் நடந்தது உண்மையே. ஆயினும் அங்கு விட இங்குதான் பன்மடங்கு மனிதர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பீஹாரிலுள்ள இந்துக்கள் காந்திக்கு ஜே என்று கோஷிப்பதோடு நில்லாமல் உண்மையாகவே பச்சாத்தாபப் படுகிறார்கள் என்பதை காட்டிக் கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். நீங்கள் சகாய நிதிக்கு தாராளமாக பண உதவி செய்ய வேண்டியது அவசியந்தான். ஆனால் அது போதாது. அத்துடன் நீங்கள் உங்களுடைய குற்றங்களை ஒப்புக் கொள்ளவும் வேண்டும். அப்பொழுதுதான் என்னுடைய மனம் சாந்தி அடையும்.

நவம்பர் மாதத்தில் நடந்த காரியங்களைப் பற்றி தகவல்கள் சேகரித்துக்கொண் டிருக்கிறேன். எனக்கு வந்த அறிக்கைகளில் ஒன்று முஸ்லிம்கள்தான் அக்கிரமத்தை ஆரம்பித்து வைத்தார்கள் என்று கூறுகிறது. ஆனால் எப்படி அக்கிரமம் ஆரம்பமாயிற்று என்பதைப் பற்றி நான் சிந்திக்க வில்லை. ஹிந்துக்கள் மிகப் பெரும் பாலோராய் இருக்கிறார்கள். அப்படி இருக்க அவர்கள் நிரபராதிகளை கொலை செய்யும் இழிவான காரியத்தில் எப்படி இறங்க முடியும் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. உண்மையாகவே மனத்தில் பச்சாத்தாபங் கொண்டு அதற்கு தக்கதாக முஸ்லிம்களுக்கு நஷ்ட ஈடு செய்யக்கூடிய காரியங்களை செய்தால்தான் இரண்டு சகோதர வகுப்பார்களுக்கு மிடையில் மறுபடியும் சாசுவதமாக சமாதானம் உண்டாக முடியும்.

முஸ்லிம்களால் கஷ்டங்களுக்கு உள்ளாக்கப் பட்ட ஹிந்துக்கள் விஷயத்தில் சர்க்கார் பராமுகமாக இருப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. அதே போல் சர்க்கார் முஸ்லிம்களுடைய குறைகளுக்கு செவி சாய்க்க வில்லை என்று முஸ்லிம் நண்பர்கள் எழுதுகிறார்கள். இருதரத்தார் கூற்றையும் நான் எளிதில் நம்பிவிட மாட்டேன். பராமுகமாகவோ பாரபக்ஷமாகவோ இருக்கும் எந்தப் பொது ஜன சர்க்காரும் கொஞ்சகாலங் கூட உயிரோடு இருக்க முடியாது. கஷ்டப்பட்டவர்களுடைய குறைகளை எல்லாம் கேட்கவும், பயங்கரமான கலகங்கள் நேர்ந்ததின் காரணங்களை அறியவும் இனிமேல் நடக்காமல் செய்வதற்கு வேண்டிய வழிகளை கண்டு பிடிக்கவும் கூடிய சீக்கிரத்தில் பாரபக்ஷமற்ற ஒரு கமிஷனை நியமிக்கப் போவதாக ஏற்கெனவே கூறி இருக்கிறார்கள். அந்த கமிஷன் கஷ்டப்பட்டவர்களுக்கு கொடுக்க வேண்டிய நஷ்ட ஈடு இது என்றும் யோசனை கூறுவார்கள். எனக்கு கடிதம் எழுதியவர்கள் கமிஷன் விசாரிக்கும் பொழுது தங்கள் சான்றுகளைச் சமர்ப்பிப்பதற்கு தயாராய் இருக்க வேண்டும். நான் குற்றம் சாட்டுபவனும் அல்ல நியாதிபதியும் அல்ல. நான் சமூக சீர்திருத்தவாதியும் மனித ஜாதியினுடைய ஊழியனும் ஆவேன்.

“ அதனால் நான் பகிரங்கமாக தெரிந்த விஷயங்களைத்தான் கவனிக்க முடியும். அத்துடன் குற்றங்களை ஒப்புக்கொண்டு பச்சாத்தாபப் படும்படி குற்றம் செய்தவர்களை கேட்டுக் கொள்ளவும் செய்வேன்.”

## காந்தியடிகளின் பீஹார் சுற்றுப் பிரயாணம்

காந்தி அடிகள் மார்ச்சு மாதம் 18 தேதி அதிகாலையில் சென்ற நவம்பர் மாதத்தில் கலகம் நடந்த கிராமங்களுக்கு போகும் சுற்றுப்பிராயணத்தை ஆரம்பித்தார். முதலில் மஸார்கி கிராமத்திற்கு, கான் அப்துல் காபர் கானுடன் சென்றார். ஊரிலுள்ள சகல பாகங்களுக்கும் கால் நடையாக நடந்து போனார். அந்தக் கிராமம் கலகத்திற்கு முன் மிக செழிப்பாக இருந்தது. கலக காலத்தில் அதிகமாக கஷ்டப் பட்டதும் அந்தக் கிராமம். அவர் பக்கத்தில் உள்ள கிராமங்களுக்கும் சென்றார். ஜனக்கூட்டம் அதிகமாகி விட்டது. 100 போலீஸ் ஜவான்களும் ,50 காங்கிரஸ் தொண்டர்களும் காந்தியடிகளைத் தரிசிப்பதற்காக ஓடி வந்தார்கள். காந்தியடிகள் கலககாலத்தில் வீட்டைவிட்டு ஓடிவிட்ட சில முஸ்லிம்களுடைய வீடுகளைப் போய்ப் பார்த்தார். சுமார் மூன்று மைல் தூரம் நடந்து கிராமத்தின் பல பகுதிகளையும் பார்த்து விட்டு 9-மணிக்கு தம்முடைய காரில் ஏறிக் கொண்டார்.

மாலையில் அங்கிருந்து 8 மைல் தூரத்திலுள்ள பிர் என்னும் கிராமத்திற்கு மோட்டார் காரில் சென்றார். போகும் வழியில் இரண்டு கிராமங்களில் கிராம வாசிகள் அவரை உற்சாகத்துடன் வரவேற்று

தன்னந்தனியாய் நிற்பவனைவிட அதிகச் சக்தி வாய்ந்தவன் உலகில் கிடையாது—இப்ஸென்,

முஸ்லிம் அகதிகளின் சகாய நிதிக்காக பணமுடிப்புகள் சமர்ப்பித்தார்கள்.

அன்று மாலை பிர். என்னும் கிராமத்தில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் கூறியதாவது:—

“பீஹாரில் நவகாளி தினம் கொண்டாட வேண்டுமென்று சிலர் கூறுவதாக அறிகிறேன். அப்படி கொண்டாடினால் உங்களுக்கு பழி வாங்க வேண்டுமென்ற ஆசை இருக்கிறதென்று அர்த்தமாகும். கொண்டாடலாமா என்று யாரேனும் என்னிடம் கேட்டால் நான் அதை அனுமதிக்க மாட்டேன். இடைக்கால சர்க்கார் பதவி ஏற்ற காலத்தில் இடைக்கால சர்க்கார் தினம் கொண்டாட வேண்டுமென்று சிலர் கூறினார்கள். இடைக்கால சர்க்காரில் சேர்ந்துள்ள நமது தலைவர்கள் முள் முடியே தரித்திருக்கிறார்கள்; அத்துடன் நவகாளியில் அக்கிரமங்கள் நடந்திருக்கின்றன; இந்த நிலைமையில் இடைக்கால சர்க்கார் தினம் கொண்டாடுவது தகாது என்று கூறினேன்.

இப்பொழுது பஞ்சாப் தினம் கொண்டாட வேண்டுமென்று ஜனங்கள் கூறுவதாகவும் அதைக் கண்டு பீஹாரிலுள்ள முஸ்லிம்கள் கலக்கமடைவதாகவும் அறிகிறேன். இந்த வதந்திக்கு ஆதாரம் இராதென்று எண்ணுகிறேன். பஞ்சாப் தினத்தை கொண்டாடினால் அது பழிக்குப்பழி வாங்குவதாக இருக்குமே தவிர வேறொன்றுமில்லை. அதனால் நம்முடைய தேசத்திற்கு புதிய விலங்குகளே சிருஷ்டியாகும். சகோதரர்களுக்குள் மறுபடியும் கொலையும் கொள்ளையுமே ஏற்படும். அத்தகைய துரதிருஷ்டம் பீஹாரில் ஏற்படுமேயானால் நான் அதைத் தடுக்க முயன்று உயிர் துறப்பேன். ஆனால் அந்த கோரக் காட்சியை பார்க்கும் வரை என்னை உயிரோடு வைத்திருக்கக் கூடாது என்று கடவுளிடம் சதா காலமும் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். இந்த விஷயத்தை என்னிடம் வந்த முஸ்லிம்களிடம் சொன்னேன். ஆனால். நான் கூறுவதை எவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்வார்களோ அறியேன். நான் என் மனத்தில் உள்ளதை உள்ளபடி கூறுகிறேன். எனக்கு உள்ளொன்று வைத்து புறமொன்று பேச தெரியாது. எந்தக் காலத்திலும் அந்த வழக்கத்தை நான் கையாண்டதில்லை”

அதன்பின் காந்தியடிகள் தாம் வரும் வழியில் இரண்டு கிராமங்களில் பெற்ற கடிதங்களை வாசித்துவிட்டு “இந்தக் கடிதங்களில் காணப்படும் நட்புணர்ச்சி உண்மையாக இருக்குமானால் எனக்கு மிகுந்த ஆறுதலும் சந்தோஷமும் உண்டாகும்” என்று கூறினார்.

## ஹிந்துக்களுக்கு புத்திமதி

காந்தியடிகள் மார்ச்சு மாதம் 20-ந் தேதி மாலை மஸார்கி என்னும் கிராமத்திலிருந்து 8-மைல் தூரத்திலுள்ள ஹார்லா, என்ற கிராமத்திற்குச் சென்று பார்வையிட்டார். அனேக வீடுகளில் உள்ள கிணறுகளில் குப்பைகளைக் கொட்டியிருப்பதைக் காட்டினார்கள். கலக காலத்தில் மனிதர்களை வெட்டி அவர்களுடைய உடல்களை கிணறுகளில் போட்டு மூடிவிட்டதாக சொன்னார்கள். ஜன்னல் இல்லாத இருட்டு அறைகளுக்குள்ளும் அவரைக் கூட்டிக்கொண்டு போனார்கள். ஒரு பெண் அவரைக் கண்டதும் கண்ணீர்விட்டு அழுதாள். அவர் அவளுக்கு ஆறுதல் கூறினார். ஊர் முழுவதும் குட்டிச்சுவராய்க் கிடந்தது. ஊரை விட்டுவெளியே வந்ததும் ஆண்களும், பெண்களும் குழந்தைகளுமாக 15000 பேர் அவருடைய தரிசனத்திற்காக காத்துக்கொண்டிருந்தார்கள். அவர் மஸார்கி கிராமத்திற்கு திரும்பிப்போகும் பொழுது கிராமவாசிகள் பல இடங்களில் அவரை வரவேற்று முஸ்லிம் சகாய நிதிக்கு நன்கொடைகள் அளித்தார்கள்.

அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியடிகள் கூறியதாவது :—

“வங்காளத்தில் மார்ச்சு மாதம் 23ந்தேதி பாக்கிஸ்தான் தினம் கொண்டாடப்போவதாக ஒரு வதந்தி உலாவுகிறது. இப்போது உள்ள நிலைமையில் அந்தக் கொண்டாட்டத்தை நடத்தினால் அது மனிதனுக்கும்கடவுளுக்கும் துரோகம் செய்ததாகும். நான் நவகாளியில் அரைகுறையாக விட்டு வந்த வேலையைப்பற்றி கவலைப்படாமல் பீஹாரில் வேலை செய்ய வேண்டுமானால் நவகாளியிலுள்ள ஹிந்துக்களுக்கு தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று நான் வங்காள பிரதம மந்திரி சுஹார்வர்த்திக்கு கூற விரும்புகிறேன்.

நான் இரண்டு நாட்களாக பிர், முதலிய கிராமங்களுக்குப் போய் இருந்தேன். அங்கு நடந்திருக்கும் அட்டூழியங்களைப் பார்த்தேன். அவற்றை கூறப்புகுந்தால் கண்ணீர் வந்துவிடுமென்று எண்ணுகிறேன். ஆயினும் ஹார்லா கிராமத்தில் பார்த்ததை சொல்லாமல் இருக்க முடியவில்லை. அந்தக் கிராமத்தில் சுமார் 150 பேரைக் கொலைசெய்திருக்கிறார்கள். கொலையுண்டவர்களில் பெரும்பாலோர் பெண்களும், பிள்ளைகளுமாவார்கள். அவர்களுடைய உடல்களை கிணற்றில் எறிந்திருக்கிறார்கள்.

நான் அவற்றைக் கூறி அழவும் வரவில்லை. அழும்படி செய்யவும் வரவில்லை. உண்மையான வீரத்துடன், நடந்துகொள்ளக் கற்றுக்கொடுப்பதற்காகவே வந்திருக்கிறேன். உண்மையான வீரனை சுகமோ துக்கமோ புகழோ இகழோ பாதிக்க மாட்டாது. இந்தக் கோர சம்பவங்கள் நடந்து இவ்வளவு நாள் ஆனபிற்பாடுங்கூட இன்னும் உங்களின் மனதில் பச்சாதாபம் உண்டாகாமல் இருப்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது-

ஹிந்துக்கள் தாங்கள் செய்தது தவறு என்று உணர்ந்து வருகிறார்கள் என்றே எண்ணுகிறேன். இன்று மாலை ஹார்லா கிராமத்திற்கு செல்லும் வழியில் 10 கிராமங்களில் உள்ள ஜனங்கள் முஸ்லிம்களுக்கு செய்த பிழையை ஒப்புக்கொண்டதோடு அதற்கு அறிகுறியாக பணமும் தந்தார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். 'அதனால் மாகாண சர்க்கார்களும், ஜனங்களுந்தான் பிழைநேர்ந்துவிட்டதற்கு பரிகாரம் செய்ய வேண்டும். பச்சாதாபம் ஏற்பட்டது உண்மையாயிருக்குமேயானால் நீங்கள் முஸ்லிம்களுக்கு சேவை செய்ய முன்வர வேண்டும். பணம் கொடுத்தால் மட்டும் போதாது சரீர உழைப்பும் தரவேண்டும். அப்படி வேலைசெய்ய விருப்பம் உள்ளவர்கள் இப்பொழுதே என்னிடம் தங்கள் பெயர்களைக் கூற வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு எந்தவிதமான வேலைகளை கொடுக்கலாம் என்று என்னால் நிச்சயிக்க முடியும். இடிந்துகிடக்கும் வீடுகளை பழுதுபார்த்து குடியிருக்கத்தக்கதாக செய்வதே உடனடியாக செய்ய வேண்டிய வேலையாகும். இந்தப் பிராயச்சித்தத்தை இப்பொழுதே செய்ய வேண்டும்.”

## பீஹாரே வழிகாட்டுக

காந்தியடிகள் இப்பொழுது சிலகாலமாக மாலையிலேயே பொதுக் கூட்டங்களில் பேசிவருகிறார்.

ஆயினும் மார்ச்சு மாதம் 22-ந்தேதி காலை மஸாரியி லிருந்து பாட்னாவுக்குத் திரும்பிவரும் வழியில் பிப்பிலாவான், என்னும் கிராமத்தில் காலையில் பிரசங்கம் செய்தார். பக்கத்திலுள்ள கிராமங்களில் வசிக்கும் ஹிந்துக்களின் பிரதிநிதிகள் வந்து திரும்பி வரும் முஸ்லிம்களை பாதுகாக்க தாங்கள் பொறுப் பேற்றுக்கொள்வதாக உறுதிகூறினார்கள். காந்தி யடிகள் கூறியதாவது :—

“கலகம் நடந்த கால முழுவதிலும் இந்தக் கிராமத் தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்களைப் போல் சமாதானமாக வாழ்ந்து வந்திருப்பதைக் காண எனக்கு சந்தோஷமாய் இருக்கிறது, அத் துடன் அவர்கள் ஒன்று சேர்ந்து கலகம் நடக்காமல் தடுத்து வந்ததாகவும் அறிகிறேன். அதற்காக அவர் களை பாராட்டுகின்றேன். இந்த விதமாகவே பீஹாரி லுள்ள ஜனங்களெல்லோரும் நடக்க வேண்டு மென்று விரும்புகிறேன். அப்படி நடந்து பீஹார் இந்தியா முழுவதற்கும் வழி காட்டுமாக.

சென்ற அக்டோபர், நவம்பர் மாதங்களில் கேவல மான காரியங்கள் அநேகம் நடந்திருக்கின்றன. ஆனால் பைத்தியம் பிடித்து விட்டால் பல தவறுகள் செய்வது வழக்கந்தான். ஆயினும் பிராயச்சித்தம் செய்யத் தயாராக இருந்தால் கடவுள் மன்னித்து விடுவார் என்பது நிச்சயம். ஹிந்துக்களும் முஸ்லிம் களும் இது போல் இன்னும் பல இடங்களில் கலக காலத்தில் சகோதரர்கள் மாதிரி நடந்து வந்திருக் கிறார்கள். இப்பொழுது ஹிந்துக்கள் பாழாக்கப் பட்ட முஸ்லிம்களுடைய வீடுகளுக்குச் சென்று அவற்றைப் பழுது பார்த்து குடி இருக்க தகுதி உள்ளதாக ஆக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் முஸ்லிம்கள் மறுபடியும் திரும்பி வந்து முன்போல் வாழ்வார்கள் என்று எதிர் பார்க்க முடியும். நான் இங்கு வந்திருப்பதின் நோக்கம் முஸ்லிம்களை திரும்பி வரும்படி செய்வதே யாகும். அந்த முயற்சியில் வெற்றி பெறாவிட்டால் உயிர் துறப்பேன். இதோ இந்த மேடையில் என் பக்கத்தில் இரண்டு பெரியோர்கள் இருக்கிறார்கள். ஒருவர் பாத்ஷாகான், அவரை நீங்கள் இதற்கு முன்னதாகவே அறிந்திருப்பீர்கள். மற்றவர் நேத்தாஜியுடன் இருந்த வரும் சிறை கிடந்தவரு மான மேஜர் ஜெனரல் ஷா நவாஸ். இருவரும் ஜனங்களுக்கு சேவை செய்வதற்காக இங்கே வந்திருக்கிறார்கள்.

பீஹார் மக்கள் என்னுடைய யோசனையைக் கேட்டு நடப்பார்களென்று நம்புகிறேன். பீஹார் மக்க ளுக்கு பிழை செய்யத் தெரியுமே யன்றி பிழையை உணர்ந்து தக்க பரிகாரம் செய்ய தெரியாது என்ற எண்ணத்தை இந்திய மகாஜனங்களிடையே உண்டு பண்ணாதிருக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள் கிறேன்.”

## கிஸான்களுக்கு புத்திமதி

காந்தியடிகள் மார்ச்சு மாதம் 22 தேதி மாலை பாட்னா வில் உள்ள பங்கிப்பூர் மைதானத்தில் செய்த பிரார்த் தனைப் பிரசங்கம் வருமாறு :—

“பீஹார் சர்க்கார் பாகிஸ்தான் தினம், பாகிஸ்தான் எதிர்ப்பு தினம், பஞ்சாப் தினம் ஆகிய கொண்டாட் டங்களை தடுத்திருப்பது போலவே கிஸான் அணி வகுப்பையும் தடுத்திருக்கிறார்கள். பஞ்சாப் தினக் கொண்டாட்ட எண்ணத்தைக் கண்டு முஸ்லிம்கள் பயப்படுகிறார்கள். அதனாலேயே பீஹார் சர்க்கார் அத்தகைய தினங்களைக் கொண்டாட வேண்டா மென்று தடுத்திருக்கிறார்கள். முஸ்லிம் லீகையும் அப்படியே பாகிஸ்தான் தினத்தைக் கொண்டாட வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி பாகிஸ்தான் எதிர்ப்பு தினத்தையும் கொண்டாடக் கூடாது. தேசத்தில் எங்கு பார்த் தாலும் நெருப்பாக இருந்து கொண்டிருக்கிறது. உணர்ச்சி பொங்கிக் கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் பேசாமல் இருப்பதே நல்லது. இந்த ஆர்ப்பாட்டங்கள் மூலமாக ஜனங்கள் விரும்புவதை யெல்லாம் பத்திரிகைகள் மூலமாக சாதித்துக் கொள்ளலாம். சர்க்கார் பத்திரிகைகளுக்கு எந்த விதமான தடை உத்தரவும் விதிக்கவில்லை.

கிஸான் அணிவகுப்பு, பாகிஸ்தான் தினக் கொண் டாட்டங்கள் போன்றதல்ல என்பது உண்மைதான். ஆயினும் அந்த அணிவகுப்பை நடத்துவதற்கு இது சரியான சமயம் அன்று. இப்பொழுது நிலைமை சீர்கேடாக இருப்பதால் அத்தகைய அணிவகுப்பால் என்ன நேரிடக் கூடுமென்று யாராலும் சொல்ல முடியாது.

பேசாமல் இருப்பதே, நல்ல காரியம் செய்ததற்கு சமானமாக இருக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு என்று பகவத்கீதை கூறுகின்றது. இப்பொழுது உள்ள நிலைமையில் கிஸான்கள் அணிவகுப்பை நடத் தாது இருந்தால் ஒரு காரியமும் செய்யாதிருப்பதின் மூலம் ஒரு நல்ல காரியத்தை செய்தவர்கள் ஆவார்கள். சர்க்கார் தடை உத்தரவு விதித்து தங்களுக்கு அநீதி செய்து விட்டதாக அவர்கள் கருதுவார்களானால் அவர்கள் அது விஷயத்தைக் குறித்து சர்க்காருக்கு எழுதலாம். பத்திரிகை மூலம் கிளர்ச்சி செய்யலாம்.

கிராமத்தில் உள்ள ஜனங்கள் பிழை செய்து விட் டோம் என்று பச்சாதாபப்படுவதைப் பார்க்கவும் நான் கூறுகிறபடி பரிகாரம் செய்ய தயாராய் இருப் பதைப் பார்க்கவும் எனக்கு திருப்தியாய் இருக் கிறது. கிராமத்தில் உள்ள ஜனங்கள் ஏழைகள்; அப்படி இருந்தும் அவர்கள் முஸ்லிம் சகாய நிதிக்கு தாராளமாய் கொடுத்து வருகிறார்கள். நான் போகும்போது காரை நிறுத்தி பண முடிப்புகள் தருகிறார்கள். முஸ்லிம்களுடைய இடிந்த வீடுகளை பழுது பார்த்துக் கொடுக்க தயாராய் இருப்பதாகவும் கூறுகிறார்கள்.

அநேக கிராமங்களில் முஸ்லிம்களை கலகக் கூட்டத் தாரிடமிருந்து ஹிந்துக்கள் காப்பாற்றி இருக் கிறார்கள். தினாப்பூர் சப் டிவிஷனில் உள்ள முஸ்லிம்கள் என்ன நேருமோ என்று பயந்து கொண்டிருந்த போதிலும் எவ்விதமான அக்கிரமங் களும் நடை பெறவில்லை யென்று முஸ்லிம்களே என்னிடம் வந்து சொன்னார்கள்.

இன்று காலையில் பிப்லாவான் கிராமத்தில் முஸ்லிம் பெண்களைப் பார்த்தேன், அவர்களுடைய மன நிலைமையை இப்பொழுது நான் கூற விரும்ப வில்லை. என் மனம் வேதனைப் படுவதால் அதை இப்பொழுது சொல்ல வேண்டியதில்லை. எப்படி பச்சாதாபப் படவேண்டும் என்பதைப் பற்றி மட்டுமே சொல்ல விரும்புகின்றேன். நான் அந்த முஸ்லிம் பெண்களுக்கு எவ்வளவு ஆறுதல் கூற முடியுமோ அவ்வளவும் கூற முயன்றேன். தைரிய மாக கடவுளை நம்பிக்கொண்டு தங்களுடைய கிராமங் களுக்கு போகுமாறு அவர்களை வேண்டிக்கொண் டேன்.”

**சூரிய வெளிச்சத்துக்குத் தீட்டுண்டா? அதுபோல்தான் தெய்வத்தின் அருளும்—ராஜாஜி.**

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மார்ச்சு 30, ஞாயிறு 1947

## புது விதமான சேவைகள்

லஹாபாத்தில் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர்களும் காரியதரிசிகளும் மகாநாடு கூடி நிர்மாண வேலை சம்பந்தமாக ஏகமனதாகச் செய்த தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியார் அங்கீகரித்திருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது காலம் மாறி வருவதால் அதற்கேற்றபடி பொறுப்புகளும் மாறி வருகின்றன என்று உணர்ந்திருப்பதைக் காண சந்தோஷமாய் இருக்கிறது. சில மாதங்களுக்கு முன்னால் திரு சர்ச்சில் பிரதம மந்திரி பதவியை இழந்தார். தொழிற் கட்சியார் அதிகாரம் பெற்றார்கள். சமாதான காலத்திற்கு என்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்பதை பிரிட்டிஷ் மாகா ஜனங்கள் இப்படி அறிந்து கொண்டு நடந்ததை கண்டு உலகமுழுவதும் ஆச்சரிய மடைந்தது. காங்கிரஸ் காரியக் கமிட்டியார் நிர்மாண திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று மாகாணக் கமிட்டிகளைக் கேட்டுக்கொண்டு செய்திருக்கும் தீர்மானமும் அது போன்ற புரட்சிகரமான காரியமே யாகும்.

நிர்மாண வேலை செய்வதற்கு வேண்டிய குணங்கள் அரசியல் கிளர்ச்சி செய்வதற்கு வேண்டிய குணங்களிலிருந்து வேறுபட்டவைகளாகும். நிர்மாண வேலை செய்வதற்கு சமூக, பொருளாதார, ஆகார, ஆரோக்கிய, சுகாதார, கல்வி போன்ற துறைகளில் கிராமங்களில் வேலை செய்வதற்கு வேண்டிய பயிற்சியும் விடா முயற்சியும் தேவையாகும். அலஹாபாத் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானத்தின்படி காரியங்களை அந்தரங்க சுத்தியாக செய்ய வேண்டுமானால் இதுவரை காங்கிரஸ் ஊழியர்களாக இருந்தவர்கள் நிர்மாண வேலை செய்யும் கஷ்டமான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமுன் அதற்கு வேண்டிய அவசியமான பயிற்சியை பெற்றுக்கொள்ள இப்பொழுதே முயலவேண்டும். காங்கிரஸ் கமிட்டிகள் விஷயங்களை கற்றுக்கொடுக்கவும் அனுபவ சாத்தியமான பயிற்சியை அளிக்கவும் கால தாமத மின்றி ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறேன்.

இதுவரை நிர்மாண ஸ்தாபனங்கள் அரசியல் வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தவர்களை அங்கத்தினர்களாக சேர்த்துக்கொள்ளுவதில்லை, ஆனால் இப்பொழுது காங்கிரஸ் மகாசபை நிர்மாண வேலையை செய்ய முன்வந்திருப்பதால் கிராமங்களை புனருத்தாரணம் செய்ய விரும்பும் எல்லோரையும் இந்த ஸ்தாபனங்கள் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளவேண்டு மென்று ஏற்படுகிறது. ஆகையால் சுதந்திர இந்தியாவில் ஜன நாயகத்திற்கு வேண்டிய பயிற்சி நிர்மாண வேலையாகவே இருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. இது வரை தேசமானது சுதந்திரப் போராட்டத்திலேயே ஈடுபட்டிருந்தபடியால் சுயநல மின்றி வேலை செய்த ஊழியர்களில் பெரும்பாலோர் அரசியல் வேலையிலேயே ஈடுபட வேண்டியவர்களா யிருந்தார்கள். தேச பக்தர்கள் என்று நிச்சயமாகத் தெரிந்த இந்த ஊழியர்களுக்கு சேவை செய்வதற்கு பல துறைகள் இப்பொழுது ஏற்பட்டிருப்பதால் அவர்கள் நம்முடைய ஜனங்களின் வாழ்வு நிலைமையை உயர்த்துவதற்கு எப்பொழுதும் போல் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் சேவை செய்ய முன் வருவார்களென்று நம்புகிறேன்.

ஜே. ஸி. குமரப்பா

## சுதந்திரம் எப்பொழுது ?

காந்தியடிகள் மார்ச்சு மாதம் 23-ந்தேதி மாலை பாட்னா நகரத்தில் உள்ள பாங்கிப்பூர் மைதானத்தில் செய்த பிரசங்கமாவது :—

"பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவை விட்டு வெளியேறுவதால் மட்டுமே சுதந்திரம் கிடைத்து விடுமென்று எண்ணினால் அது பெருந் தவறாகும். பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறிக் கொண்டு இருப்பது உண்மைதான். ஆனால் நாம் ஒருவருக் கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் வேறு யாராவது வந்து விடுவார்கள். உலக முழுவதையும் ஆயுதங்களைக் கொண்டு எதிர்த்து விடுவோம் என்று எண்ணினால் அது தவறாகும்.

பஞ்சாபில் ராணுவத்தைக் கொண்டு ஒருவாறு அமைதியை உண்டாக்கி விட்டதாக தெரிகிறது என்று ஒரு நண்பர் எனக்கு எழுதி இருக்கிறார். அந்த அமைதி உயிரற்ற உடலின் அமைதியைப் போன்றதே யாகும். ஜனங்கள் இன்னும் படுமோசமாக சண்டை இடுவதற்காக மௌனமாக ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆயுதங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் பிறகு ராணுவத்தால் கூட அவர்களை அடக்க முடியாமல் போய்விடும். ராணுவ உதவியைக் கொண்டோ போலிஸ் உதவியைக் கொண்டோ உண்டாகும் அமைதி ஒரு நாளும் உண்மையான அமைதியாக இருக்கமாட்டாது என்பது என்னுடைய திடமான நம்பிக்கை. இரண்டு கட்சியார் இல்லாவிட்டாலும் ஒரு கட்சியாராவது அஹிம்சா அனுஷ்டானம் உண்டாக்க கூடிய உண்மையான வீரத்தை கையாளும் பொழுதுதான் உண்மையான அமைதி உண்டாகும்.

பெண்களையும், பிள்ளைகளையும் கொல்லுவது வீரமாகாது என்பதை பீஹார் மக்கள் உணர்ந்து விட்டார்கள் என்று நம்புகிறேன். பெண்களையும் பிள்ளைகளையும் கொல்லுவது வெறும் கோழைத்தனமே யாகும். பீஹார் மக்கள் உண்மையான வீரத்தை மேற்கொண்டு உலகத்தார்க்கு உண்மையான வாழ்வு இது என்று காட்டுவார்களே யானால் அது ஒப்பற்ற காரியமாகும்.

ஜனங்கள் வாழ்வின் லக்ஷ்யம் எது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நம்மை சிருஷ்டித்ததும் எதன் கருணையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோமோ அந்த சக்திக்கு சேவை செய்வதே வாழ்வின் லக்ஷியமாகும். அந்த சேவை அன்பு செய்வது தான். இப்பொழுது எங்கு பார்த்தாலும் காணப்படும் துவேஷமன்று. ஜனங்கள் இந்த லக்ஷியங்களை மறந்து சண்டை இட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி சண்டை இடாமல் இருக்க முடியாது என்றால் இந்தியா சுதந்திர மடைவது என்றைக்கும் நனவாக முடியாத கனவாகவே இருக்கும்.

## காந்தியடிகளின் மந்திர சக்தி

காந்தியடிகள் பீஹாருக்கு விஜயம் செய்ததால் எவ்வளவு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பது மார்ச்சு மாதம் 22 தேதி மான்ஸி என்னும் கிராமத்தில் நடந்த சம்பவம் தெளிவாகக் காட்டு கின்றது. காந்தியடிகளைச் சந்திப்பதற்காக தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து வந்திருக்கும் முஸ்லிம் அகதிகளை அழைத்து ஹிந்துக்கள் விருந்தளித்தார்கள். அனேக ஹிந்துக்கள் முஸ்லிம் அகதிகளுடனேயே உட்கார்ந்து சாப்பிட்டார்கள். அகதிகளும் யாதொரு பயமும் இன்றி சந்தோஷமாக விருந்து உண்டார்கள்.

காந்தியடிகள் கலக காலத்தில் கஷ்டப்பட்ட காராத் என்னும் கிராமத்திற்கு மார்ச்சு மாதம் 22ம் தேதி போயிருந்த பொழுது அவரிடம் ஒரு வயதான முஸ்லிம் மௌல்வி கீழ்க்கண்டவாறு கூறினர்:—

"தாங்கள் இந்த கிராமத்திற்கு விஜயம் செய்யப் போகிறீர்கள் என்று அறிந்ததும் நாங்கள் எவ்வித பயமும் இன்றி எங்கள் மசூதிக்குச் சென்று தொழ ஆரம்பித்திருக்கிறோம்."

காந்தியடிகள் பீகாருக்கு விஜயம் செய்தபின் முக்கியமான முஸ்லீம் ஊழியர் ஒருவர் கலககாலத்தில் கஷ்டப்பட்ட கிராமங்களைப் போய்ப் பார்ப்பதற்காக போய் இருந்தார். இப்பொழுது அவர் கூறுவதாவது:—

"முஸ்லீம் அகதிகளுக்கு நம்பிக்கை ஊட்டும் விஷயத்தில் காந்தியடிகளுடைய விஜயமானது மந்திர சக்தி வாய்ந்ததாய் இருக்கிறது. அவர்களுக்கு பயம் தெளிந்து தைரியம் உண்டாகி இருக்கிறது. தங்கள் கிராமங்களுக்கு திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். இதுவரை சுமார் 20000, பேர் திரும்பி வந்திருக்கின்றார்கள்."

காந்தியடிகள் முஸ்லிம்களுடைய வீடுகளை கட்டிக் கொடுப்பதற்காக சேவை செய்ய வரும்படி ஹிந்துக்களை கேட்டுக் கொள்கிறார். அதற்கு இணங்க அனேகர் முன்வந்திருக்கின்றார்கள்.

கலக காலத்தில் அதில் கலந்து கொண்டவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறார். அதற்கு இணங்க அப்படி கலகத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் 50 பேர் காந்தி அடிகளுக்கு தங்கள் பிழையை ஒப்புக் கொண்டு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் பகிரங்கமாக தங்கள் பிழையை ஒப்புக் கொண்டு சட்டத்தின்படி கிடைக்கக் கூடிய தண்டனையை ஏற்றுக் கொள்ள வேண்டு மென்று காந்தியடிகள் அவர்களுக்கு புத்திமதி கூறியிருக்கிறார்.

### பிபி அம்துல் ஸலாம்

பிபி அம்துல் ஸலாம் அம்மையார் பல வருஷங்களாக ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகவே உயிர் வாழ்ந்து வருகிறார்.

அவர் பஞ்சாபிலுள்ள பாட்டியாலா சமஸ்தானத்தில் பேர் பெற்ற முஸ்லிம் குடும்பம் ஒன்றில் பிறந்தவர். ஆயினும் தம்முடைய சௌகர்யங்களை எல்லாம் துறந்து விட்டு 1930-ம் வருஷத்தில் மகாத்மா காந்தியடிகளுடைய ஆசிரமத்தில் வந்து சேர்ந்து கொண்டார். அது முதல் காந்தியடிகளுடைய உபதேசப் படியே தம்முடைய வாழ்வை நடத்திக் கொண்டு வருகிறார். சிறு வயதில் அவர் பிரம்மஞான சங்கத்தின் உபதேசப்படிநடந்து வந்ததால்மதப்பற்றுடைய முஸ்லிமாக இருந்த போதிலும் சகல மதங்களையும் சரி சமானமாக எண்ணும் குணத்தை தம்மிடத்தில் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஒற்றுமை உண்டாக்க வேண்டுமென்ற ஆர்வத்தினல் அதற்காக 1942 வருஷத்தில் ஒரு உருது வாரப் பத்திரிக்கையை நடத்த ஆரம்பித்தார். ஆனல் சில காரணங்களால் அதைத் தொடர்ந்து நடத்த முடியாமல் போய் விட்டது.

வங்காளத்தில் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் அவர் கிழக்கு வங்காளத்திற்கு வந்து திப்பரா ஜில்லாவில் கஷ்டப்பட்ட மக்களுக்கு அரிய சேவை செய்தார். ஆனல் அவருடைய உள்ளம் உறுதியாய் இருந்த போதிலும் அவருடைய உடம்பு அதிக பலவீனமாய் இருந்தது. அதனல் அவர் ஓய்வு கொள்வதற்காக சேவாக் கிராமத்திற்கு போக வேண்டியதாயிற்று. வங்காளத்தில் கலகங்கள் ஏற்பட்டன. நவகாளியில் அக்கிரமங்கள் நடப்பதாக கேள்விப்பட்டதும் அங்கே போக வேண்டுமென்று துடித்தார். அப்படியே வங்காளத்திற்கு வந்து வேலைசெய்ய ஆரம்பித்தார்.

அவருக்கு அக்கரமங்கள் நடந்திருப்பதைக் காண மிகுந்த வேதனை உண்டாயிற்று. முதலில் தஸ்காரியா என்னும் கிராமத்திலும் பிறகு ஸிராந்தி, என்னும் கிராமத்திலும் சேவை செய்தார். அவருக்கு ஜுரம் வந்தது. 104 டிகிரியாக இருந்தது. அப்பொழுது ஹிந்துக்கள் வீடுகளிலிருந்து எடுத்துக்கொண்ட பூஜைக்குரிய வாள்களை முஸ்லிம்கள் ஹிந்துக்களிடம் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்பதற்காக உண்ணவிரதம் இருக்க ஆரம்பித்தார். அவருடைய உண்ணவிரதத்தின் உண்மையான நோக்கம் முஸ்லிம்களிடையே உண்மையான பச்சாத்தாப உணர்ச்சியை எழுப்புவதே யாகும். உண்ணவிரதம் நீடித்தது. எனக்கு கவலை அதிகமாயிற்று.

நாங்கள் எல்லோரும் என்ன செய்வதென்று திகைத்துக் கொண்டிருந்தோம் ஆனல் அம்மையாரோ நிம்மதியாக இருந்தார். தம்மை கடவுளிடம் ஒப்புவித்துவிட்டு சாவதற்கு தயாராக இருந்தார். தர்மம் வெல்லும், என்னும் உண்மையின் சோதனையாகவே இருந்தது. இறுதியில் அவர் டிகிரி பார்க்க சம்மதிக்கவில்லை. எதற்காகப் பார்க்கவேண்டும் கவலைதானே அதிகப்படும் என்று கூறினர்.

நண்பர்கள் பல இடங்களிலிருந்தும் வந்து அவர் பொறுமையாக கஷ்டத்தை சகித்துக் கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப் பட்டார்கள். தினந்தோறும் குர்ஆனும், கீதையும் பாராயணம் செய்ய வேண்டுமென்று விரும்பினர். அது அவருக்கு ஆறுதலளித்தது. "சகோதரியாரே உம்முடைய உயிர் உமக்குச் சொந்தமன்று. அதனல் குளூகோஸ் இஞ்சக்ஷன் செய்ய தாங்கள் தயவுசெய்து அனுமதி அளிக்க வேண்டும். இப்பொழுது செய்யா விட்டாலும் தாங்கள் பிரக்ஞை இழக்கும்பொழுதாவது அதைச் செய்வதற்கு எனக்கு அனுமதி அளிக்க வேண்டும்" என்று வைத்திய நண்பர் ஒருவர் அவரிடம் மன்றாடிக் கேட்டுக்கொண்டார். அப்பொழுது அம்மையார் கண்களைத் திறந்து மிகுந்த கஷ்டத்துடன் மெதுவாகச் சொன்னர் :—

"நான் என்னுடைய உயிரை கடவுளிடம் ஒப்புவித்துவிட்டேன். அவருடைய சித்தப்படி நடக்கத் தயாராய் இருக்கிறேன். நான் உயிரோடு இருக்க வேண்டுமென்பது அவருடைய திருவுள்ளமானல் நான் சாகமாட்டேன். எனக்கு இஞ்சக்ஷன் செய்ய வேண்டாம். என்னுடைய நோக்கம் நிறைவேறும் வரை இந்த உண்ணவிரதம் நடைபெற வேண்டும்."

போலீஸாரும் உள்ளூர் தலைவர்களும்கூட கலக்கமுற்றார்கள். தங்களால் இயன்றதை யெல்லாம் செய்ய முயன்றார்கள். அவர்களெல்லோரும் காந்தியடிகளிடம் சென்று எப்படியாவது உண்ண விரதத்தை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அது அவரால் செய்யக்கூடிய காரியமாக இருக்கவில்லை. அம்மையார் தாமாக மேற்கொண்ட உண்ண விரதம் அது. அத்துடன் இடையில் நிறுத்தும்படியாக நிர்ப்பந்தம் செய்யக்கூடாதென்று அவரிடம் வாக்குறுதியும் வாங்கி இருந்தார். காந்தி அடிகள் கால் நடை யாத்திரையின் 25 நாள் அதாவது ஜனவரி மாதம் 20-ந்தேதி அன்று ஸிராந்தி கிராமத்திற்கு வந்துசேருவதற்கு ஏற்பாடாய் இருந்தது. அவர் வந்துசேரும்வரை அம்மையார் உயிரோடு இருப்பாரோ என்பது எங்களுக்கு சந்தேகமாய் இருந்தது. அதனல் அவரை அந்தத் தேதிக்கு முன்னதாகவே வரும்படி கேட்டுக்கொண்டோம்.

ஸிராந்திக்கு அவர்வந்தால் எதனாலும் பெறமுடியாத வெற்றியை பெற்றுவிடலாமென்றும் உண்ணா விரதத்தை வெற்றிகரமாக முடித்துவிடலாமென்றும் நாங்கள் எண்ணினோம். காந்தியடிகள் தம்முடைய யாத்திரைத் திட்டத்தை மாற்ற விரும்பவில்லை. அம்மையாரும் அப்படிச்செய்ய வேண்டுமென்ற ஆர்வமுடையவராக இருக்கவில்லை. "என் உயிர் போகுந் தருவாயில் வந்தால் போதும். அப்பொழுது தான் நான் அவருடைய மடியில் தலையை வைத்து ஆண்டவன்பாதத்தை சேரமுடியும்" என்று அவர் கூறினார். அப்படியேகாந்தியடிகள் ஜனவரி மாதம் 20 தேதிதான் ஸிராந்திக் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்.

அப்பொழுது அம்மையார் அபாயகரமான நிலைமையில் இருந்தார். அப்படி இருந்தும் அவரே காந்தி அடிகள் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் மேற்பார்வையிட்டு வந்தார். காந்தியடிகளிடம் அவருக்கு உள்ளபக்தி அவ்வளவு அபாரமானது. காந்தியடிகள் ஸிராந்தி கிராமத்திற்கு வரும்பொழுது அவரை எதிர்கொண்டு வரவேற்க தாம் நடந்துபோக சக்தி இல்லாதவராக இருந்தபடியால் அந்தப் பணியைச் செய்ய என்னையும் திருமதி ஆபா காந்தியையும் அனுப்பிவைத்தார்.

முஸ்லிம் தூது கோஷ்டியார் பிற்பகல் மூன்று மணிக்கு காந்தி அடிகளை பேட்டி கண்டு அக்கிரமங்கள் நடந்ததற்கு அதிகமாக வருத்தப்படுவதாக கூறி உண்ணா விரதத்தை நிறுத்தும்படி செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அதற்கு காந்தியடிகள் கூறியதாவது:—

"நான் ஹிந்துக்கள் முஸ்லிம்கள் இருவருக்கும் நண்பனாகவே வந்திருக்கிறேன். நீங்கள் என்னுடைய இருதயத்தைப் பிளந்து பார்த்தால் அன்பைத் தவிர வேறு எதையும் காண மாட்டீர்கள். பிபி அம்துல் ஸலாமிடம் மகளிடம் வைக்கும் அன்பைவிட அதிகமான அன்பை வைத்திருக்கிறேன். நான் அவளை இழக்க விரும்பவில்லை. என்னுடைய ஆஸிரமத்தில் வளரும் முஸ்லிம் சிறுவர்கள் தங்கள் மதத்தில் உறுதியாய் இருக்கவேண்டுமென்றும், ஒழுங்காக நமாஸ் ஓதவேண்டுமென்றும் ரம்ஸான் விரதம் அனுஷ்டிக்க வேண்டுமென்றும் கற்பித்து வந்திருக்கிறேன். முஸ்லிம் சகோதரர்கள் மதத்துவேஷம் உடையவர்களாக இருப்பதைக் காண சகியாத காரணத்தினாலேயே இவர் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்திருக்கிறார். இவர் இஸ்லாம் மதத்தில் மிகுந்த பற்றுடையவர். ஆயினும் அவருக்கு ஹிந்துக்களிடத்தில் அணுவளவும் துவேஷங்கிடையாது. அவர் உண்ணா விரதம் இருக்க ஆரம்பிக்கு முன் என்னிடம் அனுமதி கேட்கவில்லை. அவர் ஆண்டவனை நம்பி மேற்கொண்ட உண்ணாவிரதத்தை நான் இடையில் முறிக்கும்படி சொல்லத் துணிய மாட்டேன். தாங்கள் செய்த பிழையை உணர்ந்து பச்சாத்தாபப் படும்படி முஸ்லிம்களுடைய இதயத்தை இளக்குவதற்காகவே அவர் இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார். ஆதலால் முஸ்லிம்கள் அந்தரங்க சுத்தியாக பச்சாத்தாபம் உள்ளவர்களாகி இனி மேல் இத்தகைய காரியங்கள் நடைபெறாவென்று உறுதி மொழி கூறினால்தான் உண்ணாவிரதத்தை நிறுத்தும்படி நான் அவரிடம் வேண்டிக் கொள்ள முடியும். எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் கடவுள் ஒருவரே தான்.

பாகிஸ்தானை பலாத்காரத்தால் ஸ்தாபிக்க முடியாதென்று காயிதே ஆஜம் ஜின்னா சொல்லி இருக்கிறார் என்ற செய்தியை இன்று பத்திரிகையில் படித்தேன். பாகிஸ்தானில் சிறுபான்மையோருக்கு பரிபூரண சுதந்திரமும் பாதுகாவலும் உண்டு என்றும் அவர் சொல்லி இருக்கிறார். நான் அரசியல் நோக்கத்தோடு கிழக்கு வங்காளத்திற்கு வரவில்லை. நான் பரோபகார நோக்கத்துடன் தான் வந்திருக்கிறேன். ஹிந்துக்கள் கிழக்கு வங்காளத்தை விட்டு போய் விடவேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அதைத் தெளிவாகச் சொல்லி விடவேண்டும். அந்த விருப்பமில்லையானால் செய்த அக்கிரமங்களுக்கு பரிகாரம் செய்வதோடு இனி மேல் நடைபெறாதென்று உறுதி கூறவும் வேண்டும். அப்பொழுதுதான் உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு நான் பிபி அம்துல் ஸலாமைக் கேட்டுக் கொள்ள முடியும். ஒன்று கூறி ஒன்று செய்தால், கொடுத்த வாக்கை மீறுவதானால் அம்துல் ஸலாம் மேற்கொண்டது போலவே நானும் உண்ணாவிரதத்தை மேற்கொள்ள வேண்டி இருக்கும். ஜில்லா முழுவதற்கும் உங்களைப் பொறுப்பாக்க முடியாது. ஆனால் நீங்கள் இந்தப் பகுதியில் அமைதி நிலவும்படி செய்வதற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் நீங்கள் நவகாளி ஜில்லாவுக்கு மட்டுமின்றி கிழக்கு வங்காளம் முழுவதிலும் அமைதி உண்டாக்குவதற்கு வேண்டிய அஸ்திவாரத்தை அமைத்தவர்கள் ஆவீர்கள்."

முஸ்லிம் தலைவர்கள் தங்களுக்குள் கலந்து பேசி நடந்த அக்கிரமங்களுக்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் இனிமேல் ஸிராந்திக் கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள நான்கு கிராமங்களிலும் ஹிந்துக்களுடைய மத சுதந்தரத்தைப் பாதுகாக்க உத்தரவாதமளிப்பதாகவும் காந்தி அடிகளிடம் கூறினார்கள். இந்த உறுதி மொழியில் ஐந்து கிராமங்களின் பிரதிநிதிகளாக வந்திருந்த முஸ்லிம் தலைவர்கள் கையெழுத்துச் செய்தார்கள். இது நடக்கும்பொழுது இரவு 9-மணிக்கு மேலாகி விட்டது. அதன்பின் முஸ்லிம் சகோதரர்கள் குர்ஆன் ஓதினார்கள். அது முடிந்ததும் காந்தி அடிகள் ஒரு கோப்பையில் ஆரஞ்சு ரஸத்தை ஊற்றி பிபி அம்துல் ஸலாம் அம்மையாருக்கு கொடுத்தார்.

சுசீலா நைய்யார்.

## அதிக மகசூல், குறைந்த போஷணை

1946 டிசம்பர் மாதத்தில் வெளியான 'சாக பக்ஷண தூதன்' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் குறிப்பு ஒன்றில் காணப்படும் விஷய மிது :—

"அமெரிக்காவில் மிசௌரி மாகாணத்தின் சர்க்கார் விவசாய இலாகா சமீபத்தில் நியூஸிலண்டு பசலிக் கீரையின் போஷணையைக் குறித்தும் அதிக மகசூலுக்கும், போஷணைக்கும் உள்ள சம்பந்தத்தைக் குறித்தும் ஆராய்ச்சி செய்தார்கள். பொதுவாக ஜனங்கள் சாதாரணமான பசலியைவிட நியூஸிலந்து பசலியை சிறந்ததாக எண்ணுகிறார்கள். அது அதிக பசுமையாகவும் அதிக பருமனாகவும் இருப்பது உண்மைதான். அதற்கு காரணம், நியூஸிலண்டுபசலியை செயற்கை உரம் இட்டு பயிராக்குவது தான்.

சாதாரண பசலியில் 40 முதல் 100 வரை ஸி. ஜீவசத்து இருக்கிறது. ஆனால் நியூஸிலண்டு பசலியில் அந்த ஜீவசத்து 21 முதல் 30, வரையே காணப்படுகிறது. ஜீவசத்தின் அளவுக்கும் பசுமையின் அளவுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஆகவே செயற்கை உரங்களிட்டு வளர்த்தால் பசலியில் ஸி. ஜீவசத்து குறைந்து விடுகிறது. அதிக மகசூல் வேண்டுமென்று ஆசைப்படுவது போஷணை விஷயமாக வருத்தம் தரும் காரியமாக இருக்கிறது என்று ஆஸ்ட்ரேலியன் வைத்திய சஞ்சிகை கூறுகிறது.

ஆகவே செயற்கை உரங்களை இட்டு வளர்த்தால் கீரை தினுசுகளின் மகசூலும் அதிகமாகிறது, பருமனும் அதிகமாகிறது. ஆனால் வாசனையும், சுவையும், குறைந்து விடுகின்றன. ஆகவே அளவுக்கு மிஞ்சி இயற்கையான வளர்ச்சியில் தலை இட்டால் போஷணை குறைந்து விடுகிறது.

பெருமை நீத்ததாகப் பெருமை பேசும் பெருமையே சகிக்கக்கூடாத பெருமையாகும்—ஔரேலியன்

# சென்னையில் ஹரிஜன உதவிக் கண்காட்சி

சில வருஷங்களுக்கு முன் மகாத்மா காந்தி சென்னைக்கு விஜயம் செய்தபோது கோடம்பாக்கத்துக்கும் போயிருந்தார். சில புண்ணியவான்களின் முயற்சி காரணமாக அங்கே ஆரம்பிக்கப்பட்ட ஒரு பாடசாலைக்கு மகாத்மாஜி அஸ்திவாரக் கல் நாட்டினார்.

காந்திஜியின் கையினால் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி பள்ளிக்கூடம் இன்று மகத்தான வளர்ச்சி அடைந்திருக்கிறது. இதுவரை வெறும் கத்திரிக்காய்க்குமட்டும் பிரசித்தி பெற்றிருந்த கோடம்பாக்கம் இப்போது ஹரிஜன பாடசாலையின் மூலம் சரித்திரப் பிரசித்தி அடைந்து விட்டது.

கடந்த பல வருஷங்களாக மேற்படி பள்ளிக்கூடத்தில் பல மாணாக்கர்கள் சேர்ந்து படித்துப் பயனடைந்திருக்கிறார்கள். வெறும் ஏட்டுக் கல்வி மட்டும் அங்கே போதிக்கப் படுவதில்லை. வாழ்க்கைக்கு அத்தியாவசியமான கைத் தொழில் கல்வியைக் கற்பிப்பதே மேற்படி பாடசாலையின் முக்கிய நோக்கமாயிருந்து வருகிறது.

தச்சு வேலை, நூல் நூற்பது, நெசவுத் தொழில், கூடை முடைதல் முதலிய அபூர்வ வேலைகளுக்குக் கோடம்பாக்கம் வித்யாசாலை எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது.

இந்தப் பள்ளியில் பயிற்சி பெறும் மாணாக்கர்களுக்குத் தெரியாத வேலையே கிடையாது என்று கூடச் சொல்லலாம். சமையல் வேலை செய்வார்கள்' சலவை வேலை செய்வார்கள், பாரதியார் பாட்டைப் பாராமல் படிப்பார்கள்; நாமக்கல் கவிஞரின் பாட்டைக் கரைத்துக் குடித்திருப்பார்கள். இன்னும் குறள், மற்றத் தமிழ்க் கவிதைகள் எல்லாம் இவர்களுக்கு மனப்பாடம்தான்.

இவை எல்லாம் கற்றறிந்த இந்தப் பிள்ளைகளுக்குப் பிரசங்கம் செய்யவும் தெரியும். தங்களுடைய பிரசங்கத் திறமையை மற்றவர்களுக்குக் காட்டுவதற்குத் தானோ என்னவோ, வாரத்துக்கொருமுறை பிரசங்க வகுப்பு ஒன்று ஏற்பாடு செய்து மேற்படி வகுப்புக்குத் தலைமை வகிக்க ஒவ்வொரு பிரமுகராகக் கூட்டிச் செல்கிறார்கள். தலைமை வகிக்கும் பிரமுகர் பேசினாலும் பேசா விட்டாலும் தாங்களே பேசித் தீர்த்து விடுகிறார்கள். கடைசியாகத் தாங்கள் நூற்ற கதர் மாலையைத் தலைவருக்குப் போட்டு கௌரவம் செய்தனுப்புகிறார்கள்! அநேகமாக மேற்படி பள்ளிக்குப் போகிற தலைவர்களெல்லாம் அங்குள்ள மாணாக்கர்களிடம் பேசப் பழகிக் கொண்டுதான் வருகிறார்கள்!

இத்தனை சிறப்பாக நடைபெறும் இந்த அரிய பள்ளிக்கூடத்துக்கு ஒரே ஒரு குறையும் உண்டு. சாதாரணமாக இந்த நாட்டில் அது எங்குமே உள்ள குறைதான். எங்கேயும் ஒரு நல்ல காரியத்துக்கு அவ்வளவாக ஆதரவு இருப்பது அபூர்வமல்லவா? அதைப் போலவே கோடம்பாக்கம் ஹரிஜனப் பள்ளிக்கூடமும் பொருளாதாரத் துறையில் சற்று பலக் குறைவாக இருப்பதில் ஆச்சரியமில்லை.

மேற்படி பள்ளிக்கூடத்தை தக்கர் பாபா வித்யாலயம் என்ற புதுப் பெயருடன் புது இடத்தில்விஸ்தரிக்கவும், தொழில் கல்வியைப் பெருக்கவும், மாணாக்கர்களின் சௌகரியத்துக்கான இன்னும் சில ஏற்பாடுகள் செய்யவும் பள்ளிக்கூடத்தின் நிர்வாகிகள் பலமான முயற்சி தொடங்கி யிருக்கிறார்கள்.

ஹரிஜனங்களின் முன்னேற்றத்துக்காகவே அல்லும் பகலும் உழைத்து வரும் திவான் பகதூர் பாஷ்யம் ஐயங்கார், துரைக்கண்ணு முதலியார், 'ட்ரோஜன்' அண்ணாமலை செட்டியார், ராம்லால் ராமசாமிநாயுடு (சென்னை நகர புது ஷெரிப்) ஸ்ரீ ஜகன்னாத தாஸ் போன்றவர்கள் முயற்சி தொடங்கி யிருக்கிறார்கள். பாடசாலைக்காக அவர்கள் பணம் திரட்ட 'நிதி வசூல்' தொடங்கி யிருக்கிறார்கள். அத்துடன், எல்லோரும் பார்த்து இன்புற்றுப் பயனடையத் தக்க முறையில் ஒரு கைத்தொழில் கண்காட்சிச் சாலையையும் ஆரம்பித்திருக்கிறார்கள். தேனாம்பேட்டைபழைய காங்கிரஸ் மைதானத்தில் சென்ற 21-3-47 அன்று மேற்படி கண்காட்சிச் சாலையை ராஷ்டிரபதி ஆச்சாரிய கிருபளானி அவர்கள் ஆரம்பித்து வைத்து ஆசீர்வாதம் கூறியிருக்கிறார்.

இந்தக் கண்காட்சி வைபவம் தொடர்ந்து ஒரு மாத காலம் நடைபெறும் என்று தெரிகிறது. காட்சி சாலைக்குக் கட்டணமாக நாலணா வைத்திருக்கிறார்கள். பொது ஜனங்கள் கொடுக்கும் இந்த நாலணாவைத்தான் ஹரிஜனப் பள்ளிக்கூடத்துக்கு உதவி நிதியாகச் சேர்க்கப் போகிறார்கள்.


காட்சிசாலைக்குள்ளே, தினமும் சங்கீதக் கச்சேரிகளும் உண்டு. பிரத்யேகமாக அமைத்துள்ள சங்கீத மண்டபத்தில் தமிழ்நாட்டின் பிரபல சங்கீத வித்வான்கள் கச்சேரிசெய்ய ஒப்புக்கொண்டுள்ளார்கள். மதுரை மணி அய்யர், ஜி. என். பி., தண்டபாணி தேசிகர், அரியக்குடி, செம்பை முதலியவர்களுடைய கச்சேரிகளும், பேபி கமலா, கோபிநாத் தங்கமணி முதலியவர்களுடைய நாட்டியக் கச்சேரிகளும் நடைபெறும். ஆரம்ப விழாவன்று ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் அவர்கள் ஓர் அருமையான கச்சேரி செய்து விழாவைச் சிறப்பித்தார்கள்.

காட்சிச் சாலையில் இன்னும் பார்க்கத்தக்க விசேஷ அம்சங்களும் நிறைய இருக்கின்றன. காந்தி மகாத்மாவின் நிர்மாண திட்டக்காட்சிகள் தனித்தனியாக நடைபெறுகின்றன. சேவாக்கிராமம் என்ற பெயருடன் ஒரு தனி கிராமத்தையே சிருஷ்டித்திருக்கிறார்கள். ஆரம்பக் கல்வி, மூலாதாரக் கல்வி, முதியோர் கல்வி, புதுக்கல்வி, ஹரிஜன சேவா சங்கம், குஷ்டரோக நிவாரண விடுதி, திருவான்மியூர் கஸ்தூரிபாய் பயிற்சி முகாம், தக்ஷிண ஹிந்தி பிரசார சபை, இந்திய மாதர் சேவைப்படைச் சங்கம், ராணி ராஜ்யலட்சுமி கைத்தொழில் ஸ்தாபனம், (ஆந்திரமஹிள சபா) மது விலக்கு, கிராம சுகாதாரம், தறிபோடுதல், துணி நெய்தல், நெல் குத்தல், தேனீ வளர்த்தல், கோ சம்ரக்ஷணம், கதர்த் திட்டம், ராட்டினம் செய்தல், பனை வெல்லம் காய்ச்சுதல், காகிதம் செய்தல், பயிர்த்தொழில், மலேரியாவைத் தடுத்தல் முதலிய எல்லாக் கைத்தொழில்களுக்கும் தனித் தனி காட்சிகள் வைத்துப் போதனை செய்கிறார்கள்.

இவை எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து விவரம் தெரிந்து கொள்ளச் சுமார் நாலு மணி சாவகாசம் வேண்டி யிருக்கிறது. இதற்கிடையில் இன்னும் பல அழகிய காட்சிகளும் இருக்கின்றன. வழக்கம் போல் வாலாஜாபாத் இந்து மத பாடசாலை மாணவர்கள் பித்தான் செய்து காட்டுகிறார்கள். (அவர்களுடைய தேகப் பயிற்சி வேலைகளும், சிலம்ப வித்தைகளும் இந்தக் கண்காட்சியிலும் உண்டு என்று தெரிகிறது) மற்றும் மிட்லண்டு இன்ஷூரன்ஸ்காரர்களால் நடத்தப்படும் 'மூளைக்கு ஆகாரக் காட்சி, நேரு கபேக்காரர்கள் நடத்தும் வயிற்றுக்கு ஆகாரக் காட்சிகள் எல்லாம் உண்டு. இவை தவிர பொய்க்கால் குதிரை நாட்டியம், மெய்க்கால் குதிரை டான்ஸ், பொம்மலாட்டம் முதலிய காட்சிகளும் இருக்கின்றன.

இத்தகைய அபூர்வ கண் காட்சி சாலைக்குப் பொது ஜனங்களின் ஆதரவுதான் தேவை. நாலணாக் கொடுத்து ஒரு நல்ல காரியத்திற்கு உதவி செய்வதுடன் மூன்று மணிநேரம் உல்லாசப் பொழுது போக்கித் தருந்த பலனையும் அடையலாம் என்று சொல்லத் தேவையில்லை.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ் 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை,
பிரசுரித்தவர்: சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.











சென்ற 21-3-47 ஞாயிற்றுக் கிழமை யன்று ராஷ்டிரபதி ஆச்சாரிய கிருபளானி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சென்னை ஹரிஜன உதவிக் கண்காட்சிச் சாலையின் சில தோற்றங்கள்.

மேலே :—கண்காட்சிச்சாலையின் பிரவேச வாசல்.

மேலே வலதுபுறம் :—தக்கர் பாபா வித்யாலயத்தின் காரியதரிசி ஸ்ரீ துரைக்கண்ணு முதலியார்,

1. திருவான்மியூர் கஸ்தூரிபா பயிற்சி முகாமைச் சேர்ந்த சில மாணவிகள்.

2. ஸ்ரீமதி அம்புஜம்மாள் அவர்கள் நடத்தும் மாதர் சங்கத்தைச் சேர்ந்த சில பெண் மணிகள் தங்கள் சங்கத்தில் தயாரித்த பொருள்களை விற்பனை செய்யும் காட்சி





1. கிராமக் கைத்தொழில் காட்சி. சில கிராமத்து ஸ்திரீகள் நெல்லைக் குத்திப் பதப் படுத்துகிறார்கள்.

2. ஆந்திர மஹிள சபையைச் சேர்ந்த பெண்மணிகள் நெசவுத் தொழில் புரியும் காட்சி.

M. Jagannath